# நிவாரணப் பங்கீட்டுக்கு சங்கங்களில் பொருட்கள் இல்லை
# களஞ்சியத்தில் உணவுப் பொருட்கள் நனைந்து நாசம்

கோண்டாவில் அரச உணவுக் களஞ்சியசாலையில் பெருமளவு மா, சீனி, பருப்பு முதலிய உணவுப் பொருட்கள் மழை நீரில் நனைந்து பழுதடையும் தறுவாயில் தேங்கிக் கிடப்பதாகத் தெரியவருகிறது. இதே வேளை குடாநாட்டில் உள்ள பல நோ. கூ. சங்கங்கள் பல உணவுப் பொருள் பற்றாக்குறை காரணமாக விசேட நிவாரணம் (2-ம் கட்டம்) வழங்க முடியாத நிலையில் உள்ளதாக கூட்டுறவு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வடபகுதிக்கு வந்து சேரும் உலர் உணவுப் பொருட்களை துரிதமாக பல நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகிக்காததும், மழைக்காலம் தொடங்கு முன் உணவுக் களஞ்சியங்களில் திருத்த வேலைகளைச் செய்யத் தவறியதுமே இந்நிலைமைக்குகாரணமாகும்சில பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் இருப்பில் உள்ள பொருட்களை விநியோகித்து தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மக்களின் கஷ்டங்களைக் குறைக்க ஓரளவு முயன்று வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66)


பக்கங்கள் நான்கு விலை ரூபா - 4-50

# முரசொலி

முரசு 05 ஒலி 34 பிரமோதூத மார்கழி 16 (31-12-1990) திங்கள்


## அனுமதி மறுக்கப்பட்ட பாடசாலையில் மாணவிக்கு இடம் கிடைத்தது!

யாழ்ப்பாண நகருக்கு அண்மையில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலை ஒன்றில் க. பொ. த. உயர்தரவகுப்பிற்கு முதலில் மறுக்கப்பட்ட அனுமதி பின்பு 'ஏதோ வழியால்' வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட மாணவி கணிதம் உட்பட மூன்று விசேட சித்தியுடனும், நான்கு திறமைச் சித்தியுடனும் சித்தியடைந்து பெற்றாருடன் அனுமதிக்காக குறிப்பிட்ட கல்லூரிக்குச் சென்றபோது ஐந்து விசேட சித்தியை மட்டும் கணித நெறிக்கு அனுமதிப்பதாக அதிபர் தெரிவித்து அனுமதி மறுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கல்வி அதிகாரி ஒருவரின் உதவி நாடப்பட்டு அதற்கும் குறிப்பிட்ட பதிலே கிடைத்தது சிலநாட்களின் பின்பு 'வேறுவழியில்' அணுகியதனால் குறிப்பிட்ட மாணவிக்கு அதே கல்லூரியில் அனுமதி கிடைத்தது. இதனால் இதே பெறுபேறுகளையுடைய மாணவரின் பெற்றாரும், கல்வி அதிகாரியும் அதிர்ச்சியடைந்துள்ளனர். (32)

### கொழும்பில் யுத்த நிறுத்த ஆலோசனை

# கோண்டாவில் டிப்போ மீது குண்டு வீச்சு!

# 100 பஸ் வண்டிகள் முற்றாகச் சேதம்!

## பொறியியல் பகுதி, சாரதி பயிற்சி நிலையம் உட்பட கட்டிடங்கள் தரைமட்டம்

நேற்று மாலை கோண்டாவில் பஸ் டிப்போ மீது மூன்று குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதலில் டிப்போ தரை மட்டமாக்கப்பட்டதுடன் அங்குநின்ற பஸ்வண்டிகளும் முற்றாகச் சேதமடைந்தன. புலிகளின் போர்நிறுத்த அறிவிப்புக்குறித்து அரச தரப்பில் ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படும் இத்தருணத்தில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

நேற்று மாலை 5 மணியளவில் வந்த மூன்று குண்டு வீச்சுவிமானங்கள் கோண்டாவிலிலுள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபை டிப்போவைக் குறிவைத்து மாறி மாறி தாக்குதலை நடாத்தின.

இத்தாக்குதலினால் பஸ் போக்குவரத்து தலைமையகம் தரைமட்டமானது அங்கு நிறுத்தப்பட்டிருந்த நல்ல நிலையில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்ட பஸ்கள் முற்றாகச் சேதமடைந்தன. இதில் அண்மையில் இறக்குமதி செய்யப்பட்ட புதியரக பஸ்வண்டிகள் பத்தும் அடங்கும்.

இவற்றுடன் பஸ்வண்டிகள் திருத்தும் பொறியியல் பகுதி கட்டிடம், பஸ் நிறுத்துமிடம், சாரதிப்பயிற்சிப் பாடசாலை. முதலுவிப்பிரிவு என்பனவும் பலத்த சேதமடைந்தன.

குண்டுவீச்சு நிகழ்ந்தபோது அங்கு கடமையிலீடுபட்டிருந்த ஆறு பாதுகாப்பு ஊழியர்கள் பஸ் சேவிஸ் நிலையத்தினுள் உள்ள குழிக்குள் மறைந்திருந்ததால் மயிரிழையில் உயிர்தப்பினர். எனினும் இவர்களுக்குமோலாக சேவிஸிற்காக நிறுத்தப்பட்டிருந்த பஸ் வண்டிகள் குண்டு வீச்சினால் சிதறியது குறிப்பிடத்தக்கது.

டிப்போ மீது குண்டு வீச்சு நிகழ்ந்த போது அதன் சிதறல்களால் வீதியால் சென்ற எஸ். நபேந்திரன் (48), தேவராசா கயிலைத்தேவன் (28) ஆகியோர் பலத்த காயமடைந்தனர்.

கடந்த ஆறு மாத காலமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை செயற்படாததால் நாற்பது கோடி ரூபா நட்டம் ஏற்பட்டதாகவும், இத்தாக்குதலால் மேலும் பல கோடி ரூபா சபைக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் டிப்போ வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-11)

## எக்ஸ் அடையாள அட்டையில் இராணுவத்துக்கு சந்தேகம்

கடந்த பத்து வருடத்தின் முன் எடுத்த அடையாள அட்டையில் உள்ள படம் வைத்திருப்பவரின் தற்போதைய உருவத்தை ஒத்திராத

அடையாள அட்டை வழங்கத் தொடங்கிய ஆரம்பகாலமான 1972- ஆம் ஆண்டு எடுத்தபடத்துடன் கொழும்பிலிருந்து வந்தவருக்கே இவ்

## இராணுவத்திற்கு டீசல் கொடுத்து கிளிநொச்சிக்கு லொறிகள் வந்தன

கிளிநொச்சிமாவட்டத்திற்கு 20 லொறிகள் மூலம் உணவுப் பொருட்கள் வந்துள்ளன.

இவை வவுனியா வந்தபோது ஊரடங்குச் சட்டத்தால் அனுராதபுரத்திற்கு

யில் 90 லீற்றர் டீசல் வீதம் இருபது லொறிகளிலும் எரிபொருள் எடுக்கப்பட்டது.

இவற்றில் 11 லொறிகளில் செஞ்சிலுவைச்சங்கத்திற்கும், 4 லொறிகளில் அரசாங்க அதிபருக்கும், 5 லொறிகளில் கூட்டுறவுச் சங்கத்திற்கும் பொருட்கள் வந்துள்ளன. (35)

## ப. நோ. கூ. சங்கம் ஒன்றின்

## கொழும்பு பத்திரிகைகள் முக்கியத்துவம்

கடந்த பத்து வருடத்தின் முன் எடுத்த அடையாள அட்டையில் உள்ள படம் வைத்திருப்பவரின் தற்போதய உருவத்தை ஒத்திராத காரணத்தினால் இராணுவத்தால் தாக்கப்பட்ட சம்பவம் வவுனியா பூந்தோட்ட முகாமில் நடைபெற்றுள்ளது.

அடையாள அட்டை வழங்கத் தொடங்கிய ஆரம்பகாலமான 1972- ஆம் ஆண்டு எடுத்தபடத்துடன் கொழும்பிலிருந்து வந்தவருக்கே இவ்வாறான அனுபவம் ஏற்பட்டது

இத்துடன் அடையாள

—04 ஆம் பக்கம் பார்க்க

## மன்னார் மாவட்டத்திற்கு 10-ம் கட்ட நிவாரணம்

மன்னார் மாவட்டத்தில் 10 ஆம் கட்ட இலவச உலர் உணவு தற்போது வழங்கப்படுகின்றது.

சகலருக்குமான இலவச உணவு விநியோக அடிப்படையில் அரச ஊழியர்களுக்கு மூன்றாவது தடவையாக நிவாரண உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. எஸ். மரியாம்பிள்ளை தெரிவித்தார்.

இம் மாவட்டங்களுக்கான உணவுப் பொருட்களை வழங்க இரண்டு தடவைகள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## விடுதலை வேதங்கள் இசைத் தட்டு வடிவம்

விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினால் அண்மையில் வெளியிடப்பட்ட 'இந்தமண் எங்களின் சொந்தமண்', 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' ஒலிப் பதிவு நாடாக்கள் தற்பொழுது லண்டனில் "இசைத் தட்டு" வடிவம் பெற்றுள்ளன.

தமிழீழக் கலைஞர்களின் தயாரிப்பான இந்த ஒலிப் பதிவு நாடாக்கள் நீண்ட காலம் பாதுகாக்க வேண்டிய நோக்கில் இசைத்தட்டுக்களில் ஒலிப்பதிவு செய்யப்படுவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்

—04 ஆம் பக்கம் பார்க்க

வுப் பொருட்கள் வந்துள்ளன.

இவை வவுனியா வந்தபோது ஊரடங்குச் சட்டத்தால் அனுராதபுரத்திற்கு திருப்பி அனுபபப்பட்டிருந்தன

மீண்டும் லொறிகள் வவுனியா வந்தபோது தமக்கு டீசல் தருமாறு படையினர் கேட்டதால், ஒரு லொறி

**போருட்நிறுவனம்**

பொருள் எடுக்கப்பட்டது.

இவற்றில் 11 லொறிகளில் செஞ்சிலுவைச்சங்கத்திற்கும்,

கூட்டுறவுச் சங்கத்திற்கும் பொருட்கள் வந்துள்ளன. (35)

## ப. நோ. கூ. சங்கம் ஒன்றின் இயக்குனர் சபை கலைக்கப்படும்?

யாழ் மாவட்டத்திலுள்ள பிரபல பல. நோ. கூ. சங்கம் ஒன்று நிர்வாகரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் செயல் இழந்து வருவதனையடுத்து இச் சங்கத்தின் இயக்குனர் சபை முற்றாகக் கலைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

—04 ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு பத்திரிகைகள் முக்கியத்துவம்

விடுதலைப்புலிகளினால் விடுக்கப்பட்ட ஒருதலைப் பட்ச யுத்த நிறுத்த செய்தியை கொழும்பிலுள்ள சிங்களப்பத்திரிகைகளும், ஆங்கிலப் பத்திரிகைகளும் முக்கியத்துவம் கொடுத்து தலைப்புச் செய்திகளாகப் பிரசுரித்துள்ளன. (ப-11)

## வடமராட்சிப் பகுதியில் குறைந்த விலையில் பொருள்கள்

வடமராட்சிப் பகுதியில் போருட் நிறுவனம் புத்தாண்டையொட்டி கட்டுப்பாடற்ற முறையில் குறைந்த விலையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்கி வருகிறது.

சீனி கிலோ 45 ரூபாவாகவும் மா கிலோ 30 ரூபாவாகவும்; லக்ஸ்பிறே 53 ரூபாவாகவும் மக்களுக்கு கிடைக்கிறது.

இதே வேளை இப்பகுதியில் உணவுடன்லொறிகள்வந்ததையடுத்து அதிகளவில் விலை வீழ்ச்சிஏற்பட்டிருக்கிறது (38)

### பிரட்.மன் வீரக்கோன் தகவல்

## சகல மட்டங்களிலும் அரசு போர் நிறுத்தம் குறித்து ஆராய்வு

விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அரசிற்கு அறிவித்துள்ளதாகவும், இது குறித்து அரசு சகல மட்டங்களிலும் தற்போது ஆராய்ந்து வருவதாகவும் ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்றுத் தெரிவித்துள்ளார்.

## கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார்

புதுக்குடியிருப்புக் காட்டுப் பகுதிகளில் பன்றிக்கு வைத்த கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் இரு காலிலும் பலத்த காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்,

புதுக்குடியிருப்பு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருக்கேசு (41) என்பவரே இவ்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நீர்வேலியில் ஹெலி தாக்கு மூவர் படுகாயம்

நேற்றுக்காலை 11,30 மணியளவில் ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து வந்த ஹெலிகொப்டர் ஒன்று திடீரென நீர்வேலி கரந்தன் சந்தியில் மேற்கொண்ட தாக்குதலில் மூவர் படுகாயமடைந்தனர்

இவ்வாறு படுகாயமடைந்த

—04 ஆம் பக்கம் பார்க்க

போற்றி அருளுக - 9

# இடையறாப் பேரன்பு

"தென்னாடுடைய சிவனே போற்றி.
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.
தென்னாடுடைய சிவனே போற்றி.
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி.
தென்னாடுடைய சிவனே..........."



தென்னா என்பது வாட்கண்ணிக்கு மிகவும் விருப்பமான வார்த்தை. ஏனென்றால் அது சிவபெருமானுக்கு அவள் வைத்திருக்கும் செல்லப் பெயர். தென்னா என்ற சொல்லை யார் தான் சொல்லட்டும்; எப்போது தான் சொல்லட்டும்—அது காதிலே பட்டவுடன் அவள் வாய் தானாகவே திறந்து கொள்ளும்.

"சிவ சிவா, சிவ சிவா, சிவ சிவா..."
வாட்கண்ணி தொடர்ந்து உச்சாடனம் செய்கிறாள்.

"ஆரா அமுதே அருளே போற்றி.
பேராயிரம் உடைய பெம்மான் போற்றி.
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி.
சிந்தனைக்கரிய சிவமே போற்றி.
மந்திர மாமலை மேயாய் போற்றி
எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி.
ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி.
புரம் பல எரித்த புராண போற்றி.
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி.
... ... ... ..."

வாட்கண்ணியின் பரவச நிலை மற்றையவர்களின் கவனத்தைக் கவர்கிறது. வியப்புடன் மெச்சி விதந்து பேசுகிறார்கள்.

"இடையறாப் பேரன்பும் மழை வாரும் இணை விழியும் கொண்ட வாட்கண்ணியின் பரவச நிலை"...

"ஊனினை உருக்குவது. உள்ளொளி பெருக்குவது. உலப்பிலா ஆனந்தம் ஆய தேனினைச் சொரிவது."

"நிலத்தின்மீது விழுந்து விழுந்து அவள் வணங்கும் போது...உண்மை அன்பின் வெளிப்பாடல்லவா அது?"

"உனக்கு ஒன்று தெரியுமோ மனோன்மணி? வாட்கண்ணி எந்தை ஈசன் எம்பெருமானைத் தவிர வேறு எவரையுமே வணங்கமாட்டாள். திருமால், பிரமன், இந்திரன் யாராய் இருந்தாலும் சரி தான். அவள் பொருட்படுத்தவே மாட்டாள். அப்படி ஒரு வயிரித்த ஓர்மம் அவளுக்கு"

"அத்தேவர் தேவர் அவர் தேவர் என்றெல்லாம் பொய்த்தேவு பேசிப் புலம்புகிற புன்மை அவளுக்கு இல்லை என்கிறாய்; அப்படித் தானே!"

"ஆமாம் முந்திய முதல் நடு இறுதியும் இல்லாத மூர்த்தி மூவரும் அறிவரியான் என்பது தான் வாட்கண்ணியின் முடிந்த முடிபாகும்."

"செங்கண் அவன் பால்,
திசை முகன்பால், தேவர்கள் பால்
எங்கும் இலாததோர்
இன்பம் நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி
நந்தம்மைக் கோதாட்டி,

## சைக்கிள் திருட்டு

யாழ் போதனா வைத்தியசாலை பகுதியில் சைக்கிள் திருட்டுக்கள் அதிகரித்துள்ளது.

வெளி நோயாளர் பிரிவு மற்றும் ஊழியர் சைக்கிள் தரிப்பிடம், ஆகிய பகுதியிலே இத் திருட்டுக்கள் இடம்பெறுகின்றன. பூட்டப்பட்டு நிறுத்தப்படும் சைக்கிள்கள் கூட திறக்கப்பட்டு திருடப்படுவதுடன் சைக்கிளில் உள்ள முக்கிய உதிரிப்பாகங்களும் கழற்றி எடுத்து செல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (74)

## திருவெம்பாவை நடை பஜனை

காரைநகர் பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா சமித்தியினர் நடாத்தும் திருவெம்பாவை உற்சவகால நடைபஜனை நாளை முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.00 மணிக்குப் புறப்பட்டு ஈழத்துச் சிதம்பர நடராஜரின் ஆருத்திரா அபிடேக காலத்தில் சென்றடையும். (12)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மீண்டும் பழைய இடத்தில் எமது நிறுவனம் இயங்குகின்றது. புதுவருட, நத்தார் பண்டிகைகளையொட்டி விசேட மலிவு விற்பனையும் நடைபெறுகிறது. லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர், 249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 12188

### ஜோதிடம்

வெளிவந்துவிட்டது புத்தாண்டுப்பலன்களும் சனி மாற்றமும் விலை 4/50 எங்கும் கிடைக்கும். நூலாசிரியர் :- (ஆத்ம தத்துவஞானம்) Prof சத்தியதாஸன் ஞானம் ஸ்ரோர்ஸ், சித்தன் கேணிசந்தி. விநியோகஸ்தர்கள்-பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 12194

### தவறிவிட்டது

தம்பிராயைச் சேர்ந்த கந்தையா சண்முகம் என்பவரது அடையாளஅட்டை பூநகரியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் அல்லது பூநகரி முரசொலி முகவர் திரு. பொ. தங்கராஜா விடம் ஒப்படைக்கவும்.


★ 20 பேருக்கு வேலை நீக்கம்

# ரூபா 2 கோடியே 20 லட்சம் உணவுப் பொருள் நாசம்!

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென உலக உணவுத் திட்டப் பிரிவினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட இரண்டு கோடியே இருபது இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் பழுதானதை கணக்காய்வாளர் திணைக்கள அதிகாரிகள் கண்டுபிடித்ததையடுத்து இருபது பேர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

கொலன்னாவை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த அரிசி, சீனி. பருப்பு மற்றும் விதம் பழுதடைந்துள்ளன உணவுப் பொருட்களே இவ் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பண்டத்தரிப்பு கொத்தணி அதிபர்களுக்கு ....

ஓய்வுபெறும் ஆசிரியர்களால் ஏற்படும் வெற்றிடங்களைச் சீர்செய்யும் நடவடிக்கை பற்றி ஆராய பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அதிகாரி சகல கொத்தணி அதிபர்களையும் சகல விபரங்களுடனும் ஜனவரி முதலாம் திகதி காலை பத்துமணிக்கு கோட்டக்கல்விப் பணிமனைக்குச் சமுகமளிக்கும்படி கேட்டுள்ளார். (32)


AJL 91, 92
புதிய பிரிவுகள் ஆரம்பம்

05-01-91 சனிக்கிழமை பி. ப. 2. 30 மணி

PHYSICS — திரு. வர்ணம்
CHEMISTRY — திரு தில்லை
BOTANY — திரு நேசன்
ZOOLOGY — திரு. நாகநாதன்
PURE) MATHS — திரு. நல்லையா
APPLIED) MATHS — திரு கிருஸ்ணா

New Master Institute
B. M. C. Lane - Jaffna

12198

யாழ் பல்கலைக்கழகம்,
இலங்கை.
விவசாய பீடம்

விலங்கு வேளாண்மைத் துறைக்கு கால்நடைத் தீவனங்கள் வழங்குவதற்கான
கேள்விப் பத்திரம்

மேற்படி விலங்கு வேளாண்மைத் துறைக்கு கிரமமான முறையில் கீழ்க் குறிப்பிடப்படும் கால்நடைத் தீவன வகைகளை வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு 18. 01. 1991 - ம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக
வெளிவாரி வணிகமாணி (B. Com)
மாணவர்களின் கவனத்திற்கு

1987 -ல் இருந்து இதுவரை பரீட்சைக்குத் தோற்றத் தவறிய சகல பின்வரும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. வணிக முதற்தேர்வு First in Commerce
2. வணிகமாணி B. Com Part (i)
3. வணிகமாணி B. Com Part (ii)
4. வணிகமாணி B. Com Part (iii)

இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148 / 1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்,

12200


2-ம் ஆண்டு நினைவஞ்சலி

கொங்குண் கருங்குழலி
நந்தம்மைக் கோதாட்டி,
இங்கு நம் இல்லங்கள்
தோறும் எழுந்தருளி,
செங்கமலப் பொற்பாதம்
தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை
அடியோங்கட்கு ஆரமுதை
நங்கள் பெருமானைப்
பாடி நலந்திகழ,
பங்கயப் பூம்புனல் பாய்ந்து
ஆடேலோர் எம்பாவாய்''

''இந்தப் பூமியிலே மனிதராகப் பிறந்தவர்கள் மிகவும் பாக்கியசாலிகள். மண்ணுலகில் வந்து பிறவாமல் வானுலகிலே இன்பங்களை நுகர்ந்து கொண்டு இருக்கிறவர்கள், தேவர்கள்; விண்ணவர்கள். இவர்களை அமரர்கள் என்றும் சொல்லுவதுண்டு. அமரர்கள் அமுதம் உண்டவர்கள். அமுதம் என்பது சாவா மருந்து அமுதம் உண்டோருக்கு மரணம் இல்லை. மரணம் இல்லாத நெடிய வாழ்வு அவர்களுக்கு வாய்த்திருக்கிறது. ஆனாலும் அவர்களுக்கும் ஓர் ஏக்கம் இருக்கிறதாம்.''

''என்ன ஏக்கம்?''

''பூமியிலே போய்ப் பிறக்கவில்லையே என்ற ஏக்கம். புவனியிற் பிறந்தால் மட்டுந்தான் சிவனை வணங்கி அவன் அருளை அடையலாம். உய்தி பெறலாம். தேவர்களுக்கே அந்த ஏக்கம் இருக்கிறதாம். வாட்கண்ணி தான் இப்படி எல்லாம் சொல்லுவாள்.''

''அவளுடைய அன்பு உறுதியானது. அது இடையறாப் பேரன்பு''

- 'சித்தமழகியான்'

பூநகரி முரசொலி முகவர் திரு. பொ.தங்கராஜா விடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்
12201

## தவறிவிட்டது

க.அன்ரனி எனும் பெயருள்ள அடையாள அட்டை (இல. 58 15 73 10 3 V) கண்டி வீதியில் உள்ள புத்தூர்ச் சந்திக்கும், நிலாவரைக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து இந்திராபுரம் முகமாலை எனும் முகவரிக்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். 12202

## விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) 'மண்டேலா ரேடர்' இல 256A, பருத்தித்துறை வீதி, நல்லூர். 'அரஸ் ஜுவுளியகம்' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். 12174

திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப உறையின் இடதுபக்க மூலையில் ''கால்நடைத்தீவனங்கள் வழங்குதல்'' என்று எழுதப்படல் வேண்டும்.

1. தேங்காய்ப் பிண்ணாக்கு (தரம் I)
2. எள்ளுப் பிண்ணாக்கு (தரம் I)
3. பச்சை அரிசித் தவிடு (தரம் I)
4. புழுங்கல் தவிடு (தரம் I)
5. உளுத்தம் குருணி
6. உளுத்தம் கோது

மேற்படி பொருட்களின் 50 கிலோவிற்கு கோரும் விலையையும், ஒருமாதத்திற்கு வழங்கக் கூடிய அளவையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

இவற்றை கிளிநொச்சியில் உள்ள விவசாய பீடத்தில் வழங்குவதாயின் அதற்குரிய விலையையும் குறிப்பிடுக.

- பதிவாளர்

12186

# 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

ஜனனம்: 24 — 06 — 1961



வீர மரணம்: 31 — 12 — 1988

அகஸ்ரின் ஃபிலிப் கொன்ஸ்ரன்ரைன்
வீரவேங்கை லெஃப், றேகா

ஆண்டிரண்டு ஓடி மறைந்திடினும்
அன்பு மைந்தனே உனை என்றும் மறவோம்
ஆற்றமுடியா மனத்துயரை ஆற்றிட
மீண்டும் பிறந்திடாயோ எம் செல்வமகனே

ம. அகஸ்ரின்
37, வினாசித்தம்பி வீதி,
சாவகச்சேரி.

உமது பிரிவால் துயருறும்
தாய், தந்தை தங்கை
உறவினர், நண்பர்கள்.

12168

### புதுவை இரத்தினதுரை சொல்கிறார்:

# இலவச நிவாரணமென்றால் முண்டியடிப்பு போராட்ட அழைப்புக்கு பின்னடிப்பு!

யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் குடிக்க முடியாது என நினைத்தவர்கள் கொழும்புக்கு ஓடிவிட்டார்கள். இங்கே இருக்கக்கூடாது என நினைத்தவர்கள் கனடா, ஜேர்மனி, இந்தியா என ஓடிவிட்டார்கள். வாழ்வும், சாவும் எங்களுக்குத்தான் என்று நினைப்பவர்கள்தான் இன்று தமிழீழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கலைகலாசார பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை கைதடி நபீல்ட் பாடசாலையில் நடைபெற்ற மண்மீட்பு நிதி தொடர்பான சிற்றூர் அவை, வட்ட அவை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடலில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் இன்று நம்மவர்கள் இலவச நிவாரணம் கொடுக்கப்படும்பொழுது அதைப் போட்டிபோட்டு பெற்றுக் கொள்ள முன்வருகிறார்கள். ஆனால் போராட்டம் எனக்கூறியவுடன் ஓடி ஒளிந்துகொண்டு விடுகிறார்கள்.

எமது போராட்டம் தொடங்கிய சில தினங்களுக்குள் அரசு சிங்கள மக்களிடம் தமிழனை அழித்து பணம் தேவை எனக் கேட்டவுடன் 50. கோடி நிதியாக கிடைத்தது தமிழர்களை விரட்ட 25 ஆயிரம் இளைஞர்கள் தேவை எனக் கூறிய போது 50 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் போட்டிபோட்டுக்கொண்டு சென்றார்கள். எம்மைக் கொல்லஅரசாங்கத்திற்கு பல நாடுகள் உதவி செய்கின்றன. ஆனால் தமிழ் மக்களைக்காக்கநீங்களேஉதவ வேண்டும் நீங்களே போராட்டத்தில்குதிக்க வேண்டும். நாம் சேகரிக்கும் இந்த மண்மீட்பு நிதி தமிழ் மக்களைக் காப்பாற்றுவதற்காகவே. அதை கடனாகத்தான் கேட்கிறோம். புலிகள் சொன்னதைச் செய்வார்கள். செய்யக் கூடியதையே சொல்வார்கள். தமிழீழம்பற்றி பேசியவர்கள் இன்று தமிழனையே அழித்து வருகின்றார்கள். ஆனால் புலிகள் என்றும் மக்களைக். விட்டு ஓடியவர்களல்லள அவர்கள் வாழ்வும், சாவும் மக்களுடன் இணைந்தேயிருக்கும் என்றார். (ப-5)

### சர்வதேச படவிழாவில்

## பாலுமகேந்திராவின் 'சந்தியாராகங்கள்'

சர்வதேசத் திரை படப் விழா சென்னையில் எதிர் வரும் பத்தாம்திகதி நடைபெறுகையில் சந்தியாராகம், அஞ்சலி ஆகிய இரு தமிழ்த் திரைப்படங்களும் திரையிடப்படவுள்ளன.

'சந்தியாராகத்தை' தமிழீழத்தைச் சேர்ந்தவரும் அகில இந்தியாவின் தலைசிறந்த ஒலிப்பதிவாளர் என ஜனாதிபதி பரிசு பெற்றவருமான திரு.பாலுமகேந்திரா தயாரித்துள்ளார். அஞ்சலி திரு. மணிரத்னத்தினதாகும்.

### ஈச்சமோட்டையில் ஒளிவிழா

ஈச்சமோட்டை தையற் கலை பயிற்சி நிலைய மாணவிகளால், நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்ட ஒளிவிழா. கடந்த வெள்ளிக்கிழமை பயிற்சி நிலைய மண்டபத்தில், பயிற்சி நிலைய ஆசிரியை செல்வி எஸ். கந்தையா தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

நத்தார்த் தாத்தாவாக வேடம்பூண்டசெல்விடீ ஹேமலதா அபார திறமையினால் எல்லோரினதும் பாராட்டுதலைப் பெற்றார்.

இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக கப்டன் டீ ஏ. எம். குணசிங்கமும், சிறப்பு விருந்தினர்களாக திரு. கே. சச்சிதானந்த சிவம், திரு. ஏ. கனகசபாபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளைச் சக மாணவிகளுடன் இணைந்து திறம்படச் செய்திருந்த மாணவிகள் தலைவி செல்வி கே. குமுதினி ஈற்றில் நன்றியுரை நிகழ்த்தினார். (16)

### தென் தமிழீழத்தில் நிகழ்ந்த விபரீதம்

## தமிழர் வாடையே கூடாதென்று துன்புறுத்திப் பத்துப்பேரைக் கொன்றனர்

''சிங்கள, முஸ்லிம் பகுதிகளில் தமிழரின் வாடையே வீசக்கூடாது எனக்கூறிய முஸ்லிம் ஊர்காவல் படையினர் இராணுவ காவலில் இருந்த எமது வாய்க்குள் மண்எண்ணையை ஊற்றிப் பலமாகத்தாக்கினர் ''

இவ்வாறு மட்டக்களப்பு-36-ம்கட்டை இராணுவ முகாமில் ஐந்து மாதகாலம் தடுத்து வைக்கப்பட்டிருந்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட பெரிய போரதீவைச்சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் முரசொலிக்குத் தெரிவித்தார்.

கலவரம் காரணமாகப் பெரிய போரதீவு-முனைத்தீவு காளி கோவிலில் அகதியாக நாம் அடைக்கலம் புகுந்திருந்தோம் கடந்த ஜூலை மாதம் 19-ம் திகதி திடீரென அங்கு வந்த முஸ்லிம் ஊர்காவல் படையினர் என்னையும் மற்றும் அங்கிருந்த ஆண்களில் மேலும் 35 பேரையும் கைது செய்து இராணுவத்தினரிடம் கட்டியபடி உழவு இயந்திரத்தில் அழைத்துச்சென்ற இராணுவத்தினர் எம்மை சிங்களக்கொலனி வாசிகளிடம் ஒப்படைத்தனர்.

அவர்கள் எம்மை பலமாகச் சித்திரவதை செய்து தாக்கினர். அதன் பின்னர் மீண்டும் 36-ம்கட்டை இராணுவ முகாமுக்கு கொண்டு சென்று அடைத்து வைத்தனர்.

இராணுவத்தினர், முஸ்லிம் ஊர்காவலர் சிங்கள காடையர் ஆகியோரின் கடும் தாக்குதல்கள் காரணமாக என்னுடன் இருந்த 10 தமிழர்கள் காவலிலேயே மரணமானார்கள்.

முகாமில் நாம் இருந்த சமயம் ஒரு தடவை அங்கு செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் வருகை தந்திருந்தனர். அவர்களிடம் எங்களை விடுதலை செய்ய நடவடிக்கையெடுக்குமாறு கேட்டோம். ஆனால் அவர்கள் எம்மை விடுவிப்பதற்கான எந்த முயற்சியும் எடுத்ததாக நாம் அறியவில்லை. அதற்குப் பதிலாக அவர்களிடம் முறையிட்டதற்காக இராணுவத்தினரால் பலமாகத்தாக்கப்பட்டோம்,

என்னுடன் கைதானவர்கள் எங்கு வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவில்லை. நான் பலமாகத் தாக்கப்பட்டதினால் கடும் சுகவீனமுற்ற நிலையில் முகாம் வைத்திய அதிகாரியின் சிபார்சின் பேரில் விடுதலை செய்யப்பட்டு வாழைச்சேனையிலிருந்து கொழும்பு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தேன்.

இவ்வாறு இந்தத்தென் தமிழீழ இளைஞர் தனது அனுபவத்தை முரசொலிக்குத் தெரிவித்தார். (74)

### கவிஞர் கா. மு. ஷெரீப் வற்புறுத்து

### தி. மு .க. வில் காளிமுத்து

முன்னாள் அ தி. மு க அமைச்சரான திரு. கே காளி

சோவியத் ரஷ்யாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மாற்றங்கள் பற்றிய ஒருவிமரிசன நோக்கு.

## எழ மறுக்கும் கிருதயுகம் - 2

> ''இல்லையோ தெய்வம்
> இருந்தால் இரங்காதோ—கரும்
> கல்லையோ நாம்தொழுதோம்
> கண்டிக்கதிர் காமத்தையாவே''
>
> கதிரமலைக்கந்தன்பேரில்
> பேரின்பக்காதல் என்னும்
> தொகுதியிலிருந்து.

### இந்த நிலைமை எப்படி உண்டாயிற்று?

அதிகாரபீடத்திலிருக்கும் சக்திகள் தம்மையும் தம் நடவடிக்கைகளையும் நியாயப்படுத்தி எழுதுவனவே பிரசுரமாகும். ஒரு பண்பு நிலையில் நீண்டகாலமாக விதந்து கூறப்பட்ட ஒரு முறைமையினுள் ஏற்கனவே பிழைகள் இருந்தன என்றும் அவை சரிவரக்கண்டுபிடிக்கப்படாததாலும் அவற்றுக்கான மாற்றுவழிகள் சொல்லப்படாததாலும், நிலைமை இப்பொழுது மோசமாக இருக்கின்றதென்றும், பின்னர் கூறப்படுமேல் அந்தக் கூற்றுகள் முந்தியதை நம்பியவர்களுக்குப் பெருந்திகைப்பையே ஏற்படுத்தும்.

### மூன்றாம் உலகின் திகைப்பு

அத்தகைய ஒரு திகைப்புத்தான் ரஷ்யாவின் சமகால நிலைமைபற்றிய உண்மை தெரியவந்ததும் மூன்றாவது உலக நாடுகள் பலவற்றிலே ஏற்பட்டது.

ஆனால் முன்பு தரப்பட்ட தகவல்கள் மிக நுணுக்கமாக வாசிக்கப்பட்டிருப்பின் (ஆங்கிலத்திலே சொல்வதுபோல வரிகளுக்கிடையே வாசிக்கப்பட்டிருப்பின்) இப்பொழுது பூதாகாரமாகக் கிளம்பியுள்ள பொருளாதாரச் சிதைவு. வெகு காலத்துக்கு முன்னரே (1930களில், பின்னர் 1960களில், 1970களில்) ஏற்பட்டு விட்டதென்பதை அறியமுடியும்.

### வியாக்கியானங்கள் மிகக்குறைவு

உண்மையில் லெனின் காலத்தின் (1924) பின்னர், சோஷலிசத்தின் அடிப்படைகள், அது காலத்துக்குக்காலம் எதிர்நோக்கும் சவால்கள் ஆகியன பற்றிய ரஷ்யநிலை நின்ற விளக்கங்களும் வியாக்கியானங்களும் ரஷ்யாவில் மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளன என்பது இப்பொழுது பின்னோக்காகப் பார்க்கின்றபொழுது தெரிய வருகின்றது.

எமது அரசியல் விமர்சகர்
கு. மா. இராசையா

திறமையான செயற்பாடு நல்ல கொள்கையிலேயே தங்கியுள்ளது. (''Theory is the best form practice'') இது ஒரு மார்க்ஸிச மகாவாசகம்.

### ஐரோப்பாவில்.........

1930களுக்குப் பின் ஐரோப்பாவில் மார்க்ஸிசம் ஓர் அரசியற்சக்தி என்ற வகையில் எதிர்நோக்கிய சவால்களுக்கு விடைகாணும் பொழுது அவ்வந்நாட்டு மார்க்ஸிசச் சிந்தனையாளர்கள் மார்க்ஸியத்துக்கு அளித்த புது விளக்கங்கள் புது வியாக்கியானங்கள் போன்றவை (இத்தாலியில் கிறாம்ஸ்கி ,Gramsci), அல்தூஸர்(Althuser), பெறி அண்டர்சன் (Perry Anderson) போன்றவர்களது சிந்தனைகள்) ரஷ்யாவில் ஊக்குவிக்கப்படவில்லை.

### ......மலினப்பாடு

மாறாக லெனின் கொடுத்த விளக்கங்களையும் வியாக்கியானங்களையுங்கூட மிக எளிமைப்படுத்தி, மார்க்ஸியத்

றும் அங்கிருந்த ஆண்களில் மேலும் 35 பேரையும் கைது செய்து இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இராணுவத்தினர் எங்களைக் காவலில் வைத்திருந்து தினமும் மயக்கம் வரும்வரை தாகுவார் ள். ஒருநாள் எங்களை விடுதலை செய்யப் போவதாக கை, கால்களைக்

---

## பணிப்பாளர் சுந்தர் அறிவுரை

முதலாம் தர அதிபராக பதவி ஏற்கவுள்ள அதிபர்கள் மூன்று சக்திகளுக்கு நடுவில் செயற்படவேண்டி இருக்கின்றார்கள் என்று வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற முதலாம் தர அதிபர் பதவியேற்பு கூட்டத்தில் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மேனும் அரச இயந்திரம், பெற்றோர், சமுதாயம், ஆகிய மூன்றுக்கும் சகதிகளுக்குமத்தியில் நடு நிலை நின்று மாணவர் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பிட்ட அதிபர்கள் ஊன்றுகோலாக செயற்பட வேண்டுமென் அவர் கேட்டுக்கொண்டார். (74)

கவிஞர் கா. மு. ஷெரீப் வற்புறுத்து

## மத பேதமின்றி தமிழர் ஒன்றுபடல் வேண்டும்

"மத வேறுபாடின்றி எல்லாத் தமிழ் மக்களும் ஒன்றுபடவேண்டும்" என்று தமிழகத்தின் பழம்பெரும் கவிஞரான கா மு. ஷெரீப் ஐந்தாவது உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

மலேஷியாவில் இம்மாநாடு தொடங்கியது.

இம்மாநாட்டில் உரையாற்றிய பலரும் இலக்கியம் செழிப்படைய அமைதியும், ஒற்றுமையும் தேவையென்று வலியுறுத்தினர்.

மாநாட்டை மலேஷியத் தகவல் தொடர்பு அமைச்சர் திரு. சாமிவேலு தொடக்கி வைத்துப் பேசுகையில் சமயச் சிக்கல் ஏற்படும் போதெல்லாம் இத்தகைய இலக்கிய மாநாடுகள் மக்கள் ஒற்றுமையாக வாழ உதவும் என்று கூறினார்.

---

## கைதடியில் தீட்சை

கைதடி சைவ சிறுவர் இல்லத்தின் சமயப் பிரதேசத் தீட்சை இல்ல ஸ்ரீ நடேசப் பெருமான் ஆலயததில ஜனவரி 30-ம் திகதி நடைபெறவுள்ளது. (71)

ஏஜென்ஸிச் செய்திகள் தகவல்

## தமிழக அரசுக்கு ஆபத்து வலுவாக அண்மிக்கிறது

கலைஞர் மு. கருணாநிதி தலைமையிலான தமிழக திராவிட முன்னேற்றக் கழக அரசு விரைவில் கலைக்கப்படக் கூடிய அபாயம் அதிகரித்திருப்பதாக நேற்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

தற்போது புதுடில்லியில் உள்ள அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா பிரதமர் திரு. சந்திரசேகரைச் சந்தித்து தமிழக அரசுக்கு எதிராக மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளதனையும் இச் செய்திகள் சுட்டிக்காட்டின.

செல்வி ஜெயலலிதா இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்தியையும் சந்தித்துப் பேசினார்.

முன்னாள் அ. தி. மு. க. அமைச்சரான திரு. கே காளிமுத்து நேற்று முன் தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துகொண்டார்.

ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. அரசைக் கவிழ்க்க ஜெயலலிதா முயற்சிக்கிறார் என்று அவர் பின்னர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் குறை கூறினார்.

தமிழகம் அமைதி குலையாது இருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

---

மாறாக லெனின் கொடுத்த விளக்கங்களையும் வியாயக்கியானங்களையுங்கூட மிக எளிமைப்படுத்தி, மார்க்ஸீயத்தைச் சில சூத்திரங்களுக்குள் அடக்கும் ஒரு மலினப்பாடும் நடந்துள்ளது என்பதும் பின்னோக்கிப் பார்க்கும் பொழுது கூறப்படுகின்றது.

இந்த எளிமைப்பாடு மூன்றாவது உலக நாடுகளிலும் பொதுவுடைமை இயக்கத்தைப் பாழடித்தது. அதுபற்றிப் பின்னர் நோக்குவோம்.

### ஒரு புடைச்சார்பு

ரஷ்ய நிலைமையைச் சற்றுக் கூர்ந்து நோக்கினால், நெருக்கடிகள் தோன்றிய காலகட்டங்களில் புதிய சிந்தனைகளுக்கான சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன என்பது தெரிய வரும். ஆனால் அவை உத்தியோக பூர்வ அங்கீகாரத்தைப் பெறத் தவறியமையால் ஒரு புடைச்சார்பான விளக்கங்களே தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன. இதனால் நிர்வாகம் படிப்படியாக ஒருதேக்க நிலையை அடையத் தொடங்கிற்று எனலாம்.

இந்தத் தேக்க நிலைமைக்கான மூலவேரைக் கண்டுபிடித்தல் மிக மிக அவசியமாகும். இத்துறையில் மிக ஆழமான ஆராய்ச்சிகள் அவசியம்.

இவ்விடத்தில் ஒரு கருத்தினை முன்வைக்க விரும்புகின்றேன்.

### கட்சிக்கே மேலாண்மை

ஒக்டோபர்ப் புரட்சியை நடத்தி வெற்றிகண்டு, அரசயந்திரத்தைத் தனதாக்கி, அதன் மூலம் மார்க்ஸீயக் கொள்கைகளை அரசியல், பொருளாதார, சமூக யதார்த்தங்களாக மாற்ற முனைந்த லெனின், தனது பணிகளின் தளமாகவும் மையமாகவும் கட்சி நிறுவனத்தைக் கொண்டார் ஆரம்ப காலத்து வாத விவாதங்களுக்கு இடமளிப்பதற்கும் அதே வேளையில் திட்டவட்டமான செயற்பாட்டுக்கும் கட்சி தனிப்பட்டவர்களின் வாதவிவாதங்களுக்கு அப்பாலான ஒரு மேல் நிறுவனமாக்கினார். அவர்காலத்தில் அதுஒருசனநாயகத் தேவையாகவிருந்தது. (வளரும்)

முரசொலி

## எமது சிந்தனை

1990 — 12 — 31 திங்கள்

"பண்பட்ட மனம் பிறரை இழிவு படுத்தாது;
தாழ்வையும் சகிக்காது"

- ஹோம்

# துயரம் தோய்ந்த தொண்ணூறு

ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறு!

துன்பமும் துயரமும், சாவும் அழிவும், கண்ணீரும் கம்பலையுமாகக் கழிந்த ஆண்டு!

பசியாலும் பட்டினியாலும் வாழும் மக்களுடைய தீனமான குரலும், அடைபட்ட சிறைச்சுவர்க்குள்ளிருந்து எழும் ஓலமும் குண்டு வீசும் விமானங்களின் இரைச்சலிலும் பீரங்கி வேட்டொலியிலும் அமிழ்ந்து போன ஆண்டு!

பொலிவிழந்த நம் தாயகத்து மண்மீது அகதி முகாம்கள் கொண்டு கோலம் போடப்பட்ட ஆண்டு!

மனித உயிர் மோசமானதொரு மதிப்பிறக்கத்துக்கு (devaluation) உள்ளான ஆண்டு!

"ஒரு காலும் இது போன்ற அழிவில்லை - நம்
உடல், ஆவி, பொருள் - ஏதும் நமதில்லை!

எனவே, எந்த வருத்தமும் இன்றி இவ்வாண்டுக்கு விடை தருவோம்.

"தொண்ணூறாம் ஆண்டே நீ போ, போ, போ! - நம்
துயரமெல்லாம் கொண்டு போ, போ, போ!"

ஏழு மாதமாக நடக்கும் இந்தப் போரை, இனியும் தொடர்வதற்கு வலுவான எந்தக் காரணமும் இல்லை!

இடிபாடுகளிடையே, மக்கள், உடைமைகளை மட்டுமல்ல, தம் வாழ்வையும் தேடுகிறார்கள்.

அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விலையேற்றத்தால் மக்கள் திணறுகிறார்கள்.

உணவுக்கும் உடைக்கும் கல்விக்கும் சுகாதாரத்துக்கும் உரிய பணத்தை, துப்பாக்கிகளும் வெடிமருந்துகளும் விழுங்கி விடுகின்றன!

ஒளியின்றி எல்லாம் இருண்டு கிடக்கிறது.

இந்நிலையில் தான் புத்தாண்டு வருகிறது. பத்து லட்சம் மக்கள் அகதிகளாக அலைகையில், புத்தாண்டு தரப்போகும் வாழ்வையும் வளத்தையும் பற்றி மனமாரப் பேசமுடியுமா?

ஆனாலும், இன்று நள்ளிரவிலிருந்து அமுலுக்கு வரும் போர்நிறுத்தம் புது நம்பிக்கையும் தெம்பும் தருகிறது.

சிங்களப் பெரும்பான்மையும் தலைமையும் தம் நோக்கை உள்முகமாகத் திருப்ப வேண்டிய தருணம் இது.

தொடரும் பேரழிவை நிறுத்துவது அவர்கள் கையில் தான் இருக்கிறது. பெரும்பான்மை, தன் நாட்டுச் சிறுபான்மைகளை எவ்வாறு நடத்துகிறது என்பதே ஒரு ஜனநாயக ஆட்சியின் உரைகல்.

மகாவம்ச மனப்பான்மை மாறவேண்டும். பௌத்த சிங்களக் கனவுகளிலிருந்து அவர்கள் விடுபடவேண்டும்.

சுதந்திர இலங்கையின் 42 ஆண்டு வரலாற்றின் ஒவ்வோர் அத்தியாயமும் தமிழினம் வைத்த நம்பிக்கைக்கு எவ்வாறு துரோகமிழைக்கப்பட்டது என்பதைக் கூறும்.

இது பல இன மக்கள் வாழும் நாடு. அனைவரும் சமத்துவமாக - தன்மானத்தோடு - தலை நிமிர்ந்து வாழ்வதே நீதி; நியதி.

துரதிர்ஷ்ட வசமாக, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர, சிங்களத் தலைவர்கள் தமிழ்

---

★ தொண்டர் நிறுவனங்கள் சரியாக நிவாரணம் வழங்கவில்லை

# தீவுப்பகுதி மக்களின் நலனை முன்னிட்டு

# 'தீவக துயர்துடைப்புச் சங்கம்' ஆரம்பம்

தீவுப்பகுதி மக்களின் அவல நிலைமைகள், கஷ்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக்கூறி அதற்கான பரிகாரம் தேடும் நோக்கில் தீவக துயர்துடைப்புச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பங்குத் தந்தை வண. பிதா. ஏ. எவ் கிருபானந்தன் அடிகள் தலைமையில் சுருவிலில் இதன் அங்குரார்ப்பணக் கூட்டம் இடம்பெற்றது.

இச் சங்கமானது ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவு தோறும் ஆரம்பிக்கப்பட்டு செயற்பட விருப்பதாக அவர் தனது உரையின்போது கூறினார்.

தீவுப்பகுதியில் இதுவரை எந்த அரச சார்பற்ற நிறுவனங்களும் சரியான முறையில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இக்குறைபாடுகளைப் போக்க இனியாவது நிவாரணங்களையோ அல்லது புனரமைப்பு நடவடிக்கைகளையோ மேற்கொள்ளும் போது தீவுப்பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த அமைப்பொன்றின் மூலமாக மேற்கொள்வது சிறந்தது என்றும் இவ்வாறு வழங்குவதன் மூலமே இப் பகுதியில் இருக்கும் ஒவ்வொரு மக்களுக்கும் ஒழுங்காகநிவாரணப்பொருட்கள்போய்ச் சேரவாய்ப்புக்கள் இருக்கின்றன என்றார்.

இதன் பின் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான கிளை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (19)

மன்னார் மாவட்டத்தில்

## ஊழியர் கடமைக்கு வராததால் பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த அரச ஊழியர்கள் பலர் கடமைக்குத் திரும்பாததையடுத்து உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், வங்கிகள் உட்பட பல அரச அலுவலகங்கள் செயல் இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்குள்ள பாதிப்படைந்த பொதுமக்கள் தமக்கு நிவாரண உதவி கோரி அரச அலுவலகங்களுக்குச் சென்றும் அங்கு அலுவலர்கள் கடமைக்குத் திரும்பாததால் ஏமாற்றம் அடைந்து அலைந்து திரிகின்றனர்.

இதே வேளை வெற்றிடமாக்வுள்ள சில உயர் அதிகாரிகள் பதவிக்கு இராணுவத்தினரால் நியமனங்கள் செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது. (66)

## முகாம்களில் தஞ்சமடையும் அகதிகள் தொகை அதிகரிப்பு

இந்த மாதம் 20-ம் திகதி முதல் நேற்றுவரை மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் அகதிகளாக்கப்பட்டு கோயில்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

கோவில்போறைதீவிலுள்ள மக்கள் சந்திர வேலாயுத சாமி கோவில், கந்தசாமி கோவில், முனைத்தீவு பிள்ளையார் கோவில் ஆகிய இடங்களில் இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர்.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்களுக்கு உணவு, மருத்துவ வசதிகள் செய்வதற்கும் இராணுவம் தடைவிதித்துள்ளது. (71)

மன்னார் ..

உணவுப் பொருட்கள் கப்பல் மூலமாக வங்காலைக்கு கொண்டுவரப்பட்டு வழங்கப்படுகிறது.

தரை மார்க்கமாகவும் மடுப்பகுதிக்கும் பொருட்கள் கொண்டுவரப்பட்டு அங்குள்ள அகதிகளுக்கு வழங்கப்படுகிறது (66)

விடுதலை ..

கள் தெரிவித்தன.

தமிழீழ கலைஞர்களின்

கட்டுத்துவக்கு ..

வாறு சிகிச்சை பெறுகிறார்.

கடந்த புதன்கிழமை முத்

## மட்டக்களப்பில் மூன்று நாளில் 16 பெண்கள் மீது வன்முறை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பாறையடிவெட்டை, நெல்லிக்காடு காட்காச்சிவெட்டை ஆகிய பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் 16ற்கும் மேற்பட்ட பெண்களை பாலியல் வன்முறைக்குள்ளாக்கியுள்ளனர்.

கடந்த வியாழன் முதல் வெள்ளி, சனி ஆகிய மூன் நாட்களிலும் இச்சம்ப நடைபெற்றுள்ளது. கணப பிள்ளை தவமணி மற் தாயும் மகளும் உட் 16 பெண்களே பாலியல் முறைக்குட்படுத்தியு தாகத் தெரிவிக்கப்ப றது.

## முள்ளியில் வியாபாரி தாக்கப்பட் 20 ஆயிரம் ரூபா கொள்ளை

கொடிகாமத்திலிருந்து துன்னாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தவரைத் தாக்கிவிட்டு அவரிடமிருந்த ரூபா 20 ஆயிரம் பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாட றைச்சிக் கடையைப் பூட் விட்டு வீட்டுக்கு செ கொண்டிருந்த சம 'முள்ளி' யில் வைத்து தாக்குதல் நடைபெற் இதனால் காயமடை துன்னாலையைச் சேர்ந்த கந்தையா தங்கராசா தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். (71)

## பொருள்கள் விலை வீழ்ச்சியடைகிறது

தென்பகுதியிலிருந்து யாழ்குடா நோக்கி உணவுப் பொருட்களுடன் லொறிகள் வரத்தொடங்கியதையிட்டு மேலும் பொருட்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (33)

## அலுவலகம் இடம் மாறுகிறது

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றப்படுகின்றது.

கொக்குவில் நூல் நிலையத்தில் தற்காலிகமாக இயங்கி வந்த இந்த அலுவலகம் பருத்தித்துறை வீதியிலுள்ள இல 29, கட்டிடத்தில் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் எனத் தெரிவித்த உதவி ஆணையாளர் திரு .செ லிங்கநாதன் கூட்டுறவு

## ஊழியர் விபரம் சேகரிப்பு

கடந்த யூன் மாதத்திற்குப் பின்னர் கடமைக்குத் திரும்பாத பதவி உத்தியோகத்தர்களின் விபரங்களை கல்வித் திணைக்களம் சேகரிக்கவுள்ளது.

இது தொடர்பான படிவப் புரைகள் வடக்கு.கிழக்கு பகுதிகளிலுள்ள கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன்ஜூன் மாதம் பதினோராம் திகதிக்குப் பின்னர் மீளக் கடமைக்குத் திருப்பிய பதவி உத்தியோகத்தர்களின் விபரங்களையும் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

(ப-17)

துவமாக - தன்மானத்தோடு - தலை நிமிர்ந்து வாழ்வதே நீதி; நியதி.

துரதிர்ஷ்ட வசமாக, விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர, சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை—அபிலாஷைகளை—புரிந்துகொள்ள முனையவில்லை. ஆங்கிலேயர் விட்ட இடைவெளியை நிரப்ப வரம்பெற்று வந்தவர்களாகத் தம்மைக் கருதிக் கொண்டார்கள்.

முற்றுப் பெறாத இந்தப் போர் மூண்டபிறகும் கூட வடக்கையும் கிழக்கையும் அடக்கி ஆள்வது பற்றிய ஆராய்ச்சியே நடக்கிறது. தமிழர் தாயகத்தில் சிங்கள குடியேற்றங்கள் துப்பாக்கி முனையில் நிறுவப் படுகின்றன.

தடம்புரண்ட வாகனங்களைக் கணக்கெடுக்கும் அரசு, தடம்புரண்ட தமிழர் வாழ்வைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா இராணுவம் ஏன் அடுத்தடுத்துத் தோல்வியைத் தழுவுகிறது. என ஆராயும் இராணுவ விமர்சகர்கள் புரிந்துகொள்ளாத அடிப்படை ஒன்றுண்டு; இராணுவத்தினர் சம்பளத்துக்காகப் — போராடுகிறார்கள்; புலிகள் விடுதலைக்காக— வாழ்வுக்காகப் — போராடுகிறார்கள்!

கடந்த ஒரு மாதமாக, புலிகள் அடுத்தடுத்து. பல வெற்றிகளை ஈட்டியுள்ளார்கள். தோற்றோர் பால் பெருந்தன்மை காட்ட வேண்டிய கடப்பாடு வெற்றியீட்டுவோருக்குண்டு.

புலிகள் அறிவித்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தம் அப்பண்பாட்டின் வெளிப்பாடு.

ஸ்ரீலங்கா அரசு, தன் பங்குக்கு, தானும் யுத்த நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். இதில் கௌரவப் பிரச்சினைக்கு இடமில்லை!

கடவைகளில் நடக்கும் சோதனைகளைப் பெரிதாகக் கருதுவோர் நாடு முழுவதும் சோதனைக்குட்பட்டுள்ளதை உணர வேண்டும்.

இந்தச் சோதனையில் வெற்றியடைவதோ தோல்வி காண்பதோ நம் கைகளிலேதான் தங்கியுள்ளது.

## விடுதலை...

கள் தெரிவித்தன.

தமிழீழ கலைஞர்களின் படைப்புக்கள் 43 நாடுகளில் வெளியிடப்படுகின்ற இவ்வேளையில் லண்டன் சுயாதீனத் தொலைக்காட்சியில் விடுதலைப் புலிகளின் நிதர்சனப் பிரிவுக்கு 3 மணிநேர சேவை கிடைத்துள்ளது.

இதன் மூலம் தமிழீழக் கலைஞர்களின் படைப்புக்கள் உடனுக்குடன் வெளிநாடுகளில் வெளியிட முடியும் என விடுதலைப் புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் தெரிவித்தனர். (70)

## எக்ஸ்...

அட்டையில் 'X' அடையாளமிட்டவர்களும் இவ்வாறு தண்டிக்கப்படுவதாகவும், மலையகத்தமிழருக்கே இவ் அடையாளம் போடப்படுவதாகக்கருதி அவர்கள் யாழ் சென்று திரும்புவதில் சந்தேகமேற்பட்டு தாக்கப்பட்டனர்.

குடாநாட்டில் வாக்குரிமை கிடைக்காத குறைந்தவயதுள்ளவர் பெறும் 'X, அடையாளமுள்ள அடையாள அட்டையை வைத்திருப்பவரும் அவ்வாறான தண்டனைக்குள் அகப்படுவதாகவும்தெரிவிக்கப் படுகின்றது. (32)

## கட்டுத்துவக்கு..

வாறு சிகிச்சை பெறுகிறார்,

கடந்த புதன்கிழமை முத்தையன் காட்டுப் பகுதியிலும் கட்டுத்துவக்கு வெடித்து இருவர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது. (ப-11)

## நீர்வேலியில்...

மு. இராசேந்திரம் (18), பா. குமார் (15), யாழ் போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டனர். (ப-11)

## ப, நோ, கூ. சங்கம்...

நிவாரணப் பொருட்களோ, உணவு முத்திரைக்கான பொருட்களோ இங்கு உரிய காலப்பகுதியில் வழங்கப்படுவதில்லை என மக்கள் அடிக்கடி புகார் தெரிவித்து வருகிறார்கள்.

அண்மையில் இக்கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழுவின் நியமன உறுப்பினர் ஒருவரின் பதவியும் வாபஸ் பெறப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கூட்டுறவுச் சங்கத்தை இரு சங்கங்களாகப் பிரித்து புனரமைப்பது பற்றியும் சில மட்டங்களில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (66)

முதலாம் திகதி தொடக்கம் செயற்படும் எனத் தெரிவித்த உதவி ஆணையாளர் திரு .செ லிங்கநாதன் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர்களுக்கான 1991-ம் ஆண்டிற்கான முதலாவது மாநாடு ஜனவரி 2-ம் திகதி காலை 9 30 க்கு நடைபெறவிருப்பதாகத் தெரிவித்தார். (66)

பதவி உத்தியோகத்தர்களின் விபரங்களையும் கல்வி அமைச்சு கோரியுள்ளது. (ப-17)

## மாடுகள் அன்பளிப்பு

மன்னார் மாவட்டத்திலுள்ள மாவீரர்களின் குடும்பத்தினர்க்கு வளர்ப்பு மாடுகள் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளன.

# காலமானார்

## திரு. சி. கந்தையா

(இரண வைத்தியர்)

கரவெட்டி இழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வட்டக்கச்சியில் வசித்து வந்தவருமான இரண வைத்தியர் திரு. சின்னத்தம்பி கந்தையா அவர்கள் அமரத்துவம் எய்திவிட்டார். அன்னாரின் அந்திமக் கிரியைகள் 30 12 90-ம் திகதி வட்டக்கச்சியில் இடம்பெற்றது என்பதை உற்றார் உறவினர்க்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:

276, சில்வா வீதி,
வட்டக்கச்சி.

சி. ம. மு. குமாரசாமி
(பெறாமகன்)

12203

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 31-12-90 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது